தமிழ்நாடு அரசு

# கால்நடை பராமரிப்புத் துறை

**கால்நடை பராமரிப்புத்துறையில் கால்நடை ஆய்வாளர் நிலை 2 பதவிக்கான பயிற்சிக்கு தகுதியுள்ளோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

| வ. எண் | பதவியின் பெயர் | வயது வரம்பு SCA | SC | ST | MBC | BC | BCM | GT | மொத்த காலி பணியிட எண்ணிக்கை | கல்வி மற்றும் பிற தகுதிகள் | தற்போது நிர்ணயிக்கப்படும் அதிகபட்ச வயது |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கால்நடை ஆய்வாளர் நிலை II பதவிக்கான பயிற்சி | 35 | 35 | 35 | 32 | 32 | 32 | 30 | 583 | 12–ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். | SCA, SC, ST, MBC, BC, BCM பட்டப்படிப்பு தேர்வு பெற்றிருப்பின் அதிகபட்ச வயது 46. GT – வயது வரம்பில் மாற்றமில்லை. |

1. 11 மாத கால கால்நடை ஆய்வாளர் பயிற்சி முடித்த பின் தேர்வில் தேர்ச்சி பெற்ற பிறகு கால்நடை ஆய்வாளர் நிலை 2–ஆக பணி நியமனம் வழங்கப்படும். பயிற்சி காலத்தில் ஊதியம் / உதவித் தொகை வழங்கபட மாட்டாது.
2. காலிப்பணியிடங்கள் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் முன்னாள் இராணுவத்தினர்கள் ஆகியோரின் விகிதாச்சாரத்தை உள்ளடக்கியதாகும்.
3. கால்நடை ஆய்வாளர் பதவிக்கு விண்ணப்பதாரரின் குறைந்தபட்ச வயது 18 ஆகும். அதிகபட்ச வயது அருந்ததியர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியின வகுப்பினர்களுக்கு 35 ஆகும். மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) 32 ஆகும். பொதுப் பிரிவினருக்கு 30 ஆகும். (01.07.2019 அன்றுள்ளபடி)
4. கால்நடை ஆய்வாளர் பயிற்சிக்கான விண்ணப்பத்தினை www.tn.gov.in என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
5. விண்ணப்பத்துடன் தேர்வு கட்டணம் ரூ.100/–க்கான வங்கி வரைவோலையினை இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை–35 என்ற பெயரில் சென்னையில் மாற்றத்தக்க வகையில் தேசிய மயமாக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியிலிருந்து எடுத்து விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பிட வேண்டும் (பணமாக பெற்றுக் கொள்ள பட மாட்டாது.
6. மாற்றுத் திறனாளிகள், விதவைகள் / ஆதரவற்ற விதவைகள், SC, ST, திருநங்கைகள் ஆகியோருக்கு விண்ணப்ப கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.
7. விண்ணப்பத்தில் அனைத்து விவரங்களும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். முழுமையான விவரங்கள் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
8. குற்ற வழக்குகள், நீதிமன்றத்தால் குற்றம் சாட்டப்பட்டவர் மற்றும் அரசியலில் பங்கேற்று அதற்கான தண்டனை பெற்றவரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 20.12.2019 அன்று மாலை 5.45 மணிக்குள் இணையதளம் மூலமாக விண்ணப்பிக்க வேண்டும்.
10. ஏற்கனவே பணிபுரிந்த அரசுத் துறை / அரசு அலுவலகத்திடமிருந்து குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் பணிநீக்கம் செய்யப்பட்டிருப்பின் அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
11. மேற்கண்ட பதவிக்கு எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணலில் பெறும் மதிப்பெண்களின் படி, இன சுழற்சி அடிப்படையில் மட்டுமே தேர்வு செய்யப்படும். எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வினை எந்த நிலையிலும் நிறுத்துவதற்கும் / ரத்து செய்வதற்கும் கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், இயக்குநருக்கு முழு அதிகாரம் உண்டு.

இயக்குநர்

கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள்

செமதொஇ/1440/வரைகலை/2019

CS Scanned with CamScanner

பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு அரசு

கால்நடை பராமரிப்புத்துறை

கால்நடை ஆய்வாளர் நிலை–2 பதவிக்கு 11 மாத கால கால்நடை ஆய்வாளர் பயிற்சிக்கு தேர்வு செய்திட எழுத்துத் தேர்வுக்கு கீழ்க்குறிப்பிட்ட இனங்களில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறன்றன.

| வ.எண் | இனம் | வயது தகுதி | கல்வித் தகுதி | தற்போது நிர்ணயிக்கப்படும் அதிகபட்ச வயது |
|---|---|---|---|---|
| 1. | SC | 35 | 12–ம் வகுப்பு தேர்ச்சி | SCA, SC, ST, MBC, BC, BCM பட்டப்படிப்பு தேர்வு பெற்றிருப்பின் அதிகபட்ச வயது 46. GT – வயது வரம்பில் மாற்றமில்லை |
| 2. | SCA | 35 | | |
| 3. | ST | 35 | | |
| 4. | MBC | 32 | | |
| 5. | BC | 32 | | |
| 6. | BCM | 32 | | |
| 7. | GT | 30 | | |

**மொத்த காலிபணியிடம் 583**

1. மாதிரி விண்ணப்பங்களை www.tn.gov.in, என்ற இணையதளத்தில் கட்டணமின்றி பதிவிறக்கம் செய்திடலாம்
2. பூர்த்தி செய்த விண்ணப்பங்ளை இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை–35 என்ற முகவரியில் 20.12.2019 அன்று பிற்பகல் 5.45 மணிக்குள் நேரில் (அ) அஞ்சல் வழியாக பெறப்பட வேண்டும்.
3. தேர்வுக் கட்டணம் ரூ.100/– இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை–35 (In favour of ''DIRECTOR OF ANIMAL HUSBANDRY AND VETERINARY SERVICES, CHENNAI-35'') என்ற பெயரில் சென்னையில் மாற்றத்தக்க வகையில் வரைவோலை எடுத்து விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பிட வேண்டும். தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தவருக்கு தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படும். பணம் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.

இயக்குநர்,
கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள்,
சென்னை–35

**தமிழ்நாடு அரசு**

**கால்நடை பராமரிப்புத்துறை**

**கால்நடை ஆய்வாளர் நிலை–2 பதவிக்கு 11 மாத கால பயிற்சிக்கான எழுத்துத் தேர்வுக்கான விண்ணப்ப படிவம்.**

| | | | |
|---|---|---|---|
| 1. | i)விண்ணப்பதாரரின் பெயர் (தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்) | | புகைப்படம் |
| | ii) பாலினம் | ஆண் /பெண் / திருநங்கை | |
| 2. | தந்தை பெயர்/கணவர் பெயர் | | |
| 3. | நிலையான முகவரி (அஞ்சலக குறியீட்டு எண்ணுடன்) | | |
| 4. | i)தொலைபேசி எண்<br>ii) கைபேசி எண்<br>iii) மின்னஞ்சல் முகவரி | | |
| 5. | i)பிறந்த தேதி<br>ii) வயது (01.07.2019ன்படி) | | |
| 6. | i)அரசு பணிகளில் சேர முன்னுரிமை பெற்றவரா | ஆம் / இல்லை | |
| | ii) முன்னுரிமை பெற்றவர் எனில் எந்த வகையான முன்னுரிமை? (ஆதாரமாக சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | கணவனால் கைவிடப்பட்டவர் / | |
| | | ஆதரவற்ற விதவை | |
| | | மாற்றுத் திறனாளி (இயலாமையின் சதவீதத்திற்கு ஆதாரமாக சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| | | கலப்புத் திருமண தம்பதி | |
| | | முன்னாள் இராணுவத்தினர் | |
| | | பிற முன்னுரிமையுள்ளவர் (முன்னுரிமையினை தவறாமல் குறிப்பிட வேண்டும்) | |
| 7. | கல்வித் தகுதி | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 8. | i)மதம் | இந்து / இசுலாம் / கிறிஸ்தவம் / பௌத்தம் / பிற | வகுப்பு | ஜாதி |
| | ii) வகுப்பு / உட்பிரிவு சாதி | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (அருந்ததியினர்) | | |
| | | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் | | |
| | | பழங்குடியினர் | | |
| | | மிகவும் பிற்பட்ட வகுப்பினர் | | |
| | | பிற்பட்ட வகுப்பினர் | | |
| | | பிற்பட்ட வகுப்பினர் (இசுலாமியர்) | | |
| | | பொதுப்பிரிவினர் | | |
| 9. | i)விண்ணப்பதாரர் மீது குற்றவியல் வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளதா ? | ஆம் / இல்லை | | |
| | ii) ஆம் எனில் விவரங்கள் தரவும் | | | |
| 10. | i)விண்ணப்பதாரர் குற்றவழக்கில் (Criminal Case) ஏதேனும் தண்டனை பெற்றவரா | ஆம் / இல்லை | | |
| | ii)ஆம் எனில் விவரங்கள் தரவும் | | | |
| 12 | சான்றுகள் | i)+2 மதிப்பெண் சான்று நகல் | | |
| | | ii)சாதிச் சான்று நகல் | | |
| | | iii)முன்னுரிமைச் சான்று நகல் (தேவை இருப்பின்) | | |
| | | iv) மாற்றுத் திறனாளி சான்றிதழ் | | |
| 13 | **உறுதிமொழி**<br>மேற்குறிப்பிட்டுள்ள என்னால் வழங்கப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் சரியானவைகள் எனவும் இதனில் ஏதேனும் தவறு என பின்னர் தெரியவந்தால் அதனால் எடுக்கப்படும் எல்லா வகையான நடவடிக்கைக்கு நான் உட்படுவேன் என உறுதியளிக்கின்றேன்.<br><br>விண்ணப்பதாரர் கையொப்பம்<br>நாள் | | | |

குறிப்பு– பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை இயக்குநர் , கால்நடை பராமரிப்பு மற்றம் மருத்துவப் பணிகள் எண்.571, அண்ணாசாலை சென்னை – 35 என்ற முகவரிக்கு அறிவிக்கையில் குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் தபால் மூலமாகவோ அல்லது நேரிலேயோ ஒப்படைக்கப்படவேண்டும் .

இயக்குநர்,
கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள்,
சென்னை–35.